ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2305/12 - 2022 නොවැම්බර් මස 09 වැනි බදාදා - 2022.11.09

*2305/12 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களது அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் ஒழுங்குவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய திருத்திய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 277 (1அ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரால் ஒஃப் த ஃபிலீட் வசந்த கரன்னாகொட ஆகிய நான், குருநாகல் மாநகர சபையின் நகர முதல்வரினால் திருத்திய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 277 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிழைகள் ஏதும் செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக இந்த அறிவித்தல் விடுத்த திகதி தொடக்கம் மூன்று மாதத்தினுள் பரிசீலித்து எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர் திரு. ஏக்கநாயக்க வீரகோன் முதியன்சேலாகே லலித் ஏக்கநாயக்க அவர்களை இத்தால் நியமிக்கின்றேன்.

இந்த உத்தியோகத்தருக்கு இப் பரிசீலனைக்கு உரித்தாக பரிசீலனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அதிகாரம் உண்டு.

அட்மிரால் ஒஃப் த ஃபிலீட் **வசந்த கரன்னாகொட,**
வடமேல் மாகாண ஆளுநர்.

குருநாகல்,
2022, நவெம்பர் 09.